சந்மார்க்க போதினி.

(ஐந்தாம் பாகம்.)

ஹைஸ்கூல்

இரண்டாவது வகுப்புக்கு ஏற்றது.

0373

4B05

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

வித்தியாநுபாலன அச்சகம்

சென்னை.

விலை அணா 2.

சந்மார்க்க போதினி.

(ஐந்தாம் பாகம்.)

ஹைஸ்கூல்

இரண்டாவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணா 2.

முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக் கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தக மும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான் மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல் களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டு கின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியா சாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தக சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தன ௵ சித்திரை ௴.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

சந்மார்க்க போதினி.

ஐந்தாம் பாகம்.

இளமையிற் கல்வி கற்றுப் பெற்றோர்களைப் பேணி, கடவுளை வழிபட்டுச், சான்றோர் செல்லும் நெறியிற் செல்லுதல் ஒருவனுக்கு உயர்வாம்.

செழுங்கிளை தாங்காதான் செல்வமும், விளையுங்காலத்திற் காவாதான் பயிரும், இளமை தொட்டே கள்ளுண்பவன் வாழ்க்கையும் கெட்டுப்போம்.

களவு செய்யாமலும், கள்ளுண்ணாமலும், கயவருடன் நட்புக்கொள்ளாமலும், சூதாடாமலும், பிறர் வருந்த வன்சொற் கூறாமலும், ஊன் உண்ணாமலும், ஒருவன் இருப்பானாயின் அவன் மகா புண்ணியவான்.

நீராடி உண்பதும், பொய்ச்சான்று புகலாதிருப்பதும், உயிர் நீங்கினும் சான்றாண்மை நீங்காதிருப்பதும், தூயவர் செயல்கள்.

உயிர்களிடத்தில் அன்பற்றிருப்பதும், பொருட்பற்றினால் அறத்தை அழிப்பதும், நட்பினால் ஒருபாற் கோடுதலும், கீழ்மக்கள் குணமாகும்.

நண்பர் ஆகத் தகாதவரை நட்புச் செய்கிற வனும், மனைவியைக் காவாதவனும், இழி மொழி பேசுகிறவனும், நல்லொழுக்கமில்லா தவன்.

நமக்கு நல்லொழுக்கமும், புகழும், இன்ப மும் வருதல் தவிர்தல்கள் முறையே நமது நற்சார்பு தீச்சார்புகளினால் ஆகும்.

என்றேனும் இவ்வாழ்வு விழுந்து விடும்; ஆதலால் உன் வாழ்நாளைத் தக்கவாறு பயன் படுத்திக்கொள்.

புதல்வன் தந்தைக்குச் செய்யும் நன்றியா வது இவனைப் புதல்வனாகப் பெற இவன் தந்தை என்ன தவஞ் செய்தானோ என்று உலகத்தார் சொல்லுமாறு ஒழுகுதலாம்.

சந்மார்க்க முறைகளைக் கற்றபின் அவைக் கேற்ப நடத்தல் வேண்டும்.

பயனில்லாத சொற்களைப் பலதரஞ் சொல்லுவானை மனிதன் என்று கூறுது மக்க ளுள் பதர் என்று மேலோர் கூறுவர்.

தமக்குத் தீங்கு செய்தாரை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ்வொரு நாளை இன்பமே; அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியு மளவும் புகழ் உண்டாம்.

கடுஞ்சொற்களைப் பொறுப்பவர், முற்றும் துறந்த முனிவர்கள்போலத் தூய்மையுடைய வர்.

ஒருவன் இனிய சொற்கள் சொல்லாமல் கடுஞ் சொற்களைப் பேசுதல் ஒரு மரத்தில் பழங்களை விட்டுக் காய்களைப் பறித்தல்போலும்.

எல்லாரிடத்தும் இன்பத்தை உண்டாக்கும் இன்சொல்லைப் பேசுபவர்கட்குத் துன்பத்தை உண்டாக்கும் வறுமையில்லை.

ஒருவனுக்கு மனமகிழ்ச்சியுடன் வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் பார்க்க, முக மலர்ந்து இனிய சொற்களைச் சொல்லுதல் நல்லது.

ஒவ்வொருநாளும் தவறாது அறஞ்செய்வாயின் அச்செயலே அவன் பிறவியை ஒழிக்கும்.

பிறரால் செய்தற்கு அரிய செயல்களைச் செய்வார் உத்தமர், பிறராற் செய்யக்கூடியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யார் மத்திமர், பிறராற் செய்யக்கூடியவற்றைத் தானும் செய்யாதார் அதமர்.

ஒருவன் துன்பகாலத்துத் தனக்கு ஆதரவாய் இருந்தவரது நட்பை விடாமலும், அறிவொழுக்கங்களில் குற்றம் இல்லாதவர் உடைய நட்பை மறவாமலும் இருத்தல் வேண்டும்.

தன்னோடு சேர்ந்தாரது குற்றத்தை அவர் புறத்துப் பலர்க்கும் சொல்லுதல் அறமன்று.

தம் உயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையும் தவம் எனப்படும்.

அம்பு அழகாயிருப்பினும் செயலால் கொடியது, யாழ் வளைந்து இருப்பினும் செயலால் இனியது; ஆகவே ஒருவரின் வடிவத்தை நோக்காது செயலை நோக்கல் வேண்டும்.

நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத் தத்தஞ் செய்யுமுன் அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்க.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கையில்லாத பொழுது செல்வராவார் ஒருவருமிலர். அது உள்ளபொழுதே வறியவராவார் மிக அரியர்.

பிறர்க்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும்பொழுது பொறாமை இன்றி மகிழ்தலே நல்மனசுக்கு அழகு.

பிறருடைய இன்சொற்கள் எமக்கு இன்பஞ் செய்தலால் நாமும் பிறரிடத்து இன்சொற்களையே சொல்ல வேண்டும்.

பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின் அதுவே வழியாக மற்றப் பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்து விடாதே.

பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்துப் பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு நீயும் உண்ணுவாயாக.

நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லு மிடத்து உன்னின் வலியவர் உன்னை

வருத்த வரும்போது அவர் முன் அஞ்சி நிற்கும் உனது நிலையை நினைத்துப் பார்ப்பாயாக.

உண்ணும் வகை அறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறு அடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெயிட்டு முழுகுதலும் உளவாயின் உடம்பில் நோய் அணுகாது.

அருட் செல்வம் அறிவுடையோரிடத்து மாத்திரம் உளதாகி எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும். பொருட்செல்வம், நாவை அடக்கி விக்கல் எடுக்கும்போது, ஒன்றைச் செய்தல் அல்லது சொல்லல் தானும் கூடாமை யாலும் எவரும் அருட்செல்வத்தையே பெற விரும்பவேண்டும்.

செல்வம் நிலையில்லாததனால் அது வந்த பொழுது செய்யக்கூடிய அறங்களைச் செய்ய வேண்டும்.

கோடிக்கணக்கான பொருளைத் தொகுப்பினும் தெய்வம் வகுத்தவழியில் தான் அனுபவிக்க முடியும்.

உன் நெஞ்சில் அறிந்த உண்மை பொய்ப்பின் அந்த நெஞ்சே உன்னைச் சுடும்.

ஒருவன் தன்னைக் காக்க நினைப்பின் தன் மனத்தில் சினம் வராமல் காக்கவேண்டும். காவாக்கால் அச்சினம் அவனையே கொல்லும்.

ஒழுக்கமுடையவர்களின் சொற்கள் சேற்று நிலத்தில் ஊன்றுகோல் உதவி செய்வதுபோல வாழ்வில் உதவக்கூடியவை.

முன்னே தன் குற்றத்தை நீக்கிப் பின் பிறர் குற்றத்தை ஆராய்வோனுக்கு எவ்வித மன வருத்தமும் வாராது.

நல்ல இனத்தைவிடச் சிறந்த துணையும் தீய இனத்தை விடத் துன்பம் தரும் பகையும் உலகில் காணக் கிடையாது.

யாராயினும் நாவைக் காக்க வேண்டும்; ஆராய்ந்து ஓய்ந்து சிந்தித்துப் பேசவேண்டும்; இல்லாவிடின் பல கேடுகள் விளையும்.

விருந்து, தெய்வம், சுற்றம் முதலாயினோருக்குக் கொடுத்துண்ணாத உணவு இழிவுள்ளது.

இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்கள் செய்தவனைச் சென்றடைதல் தப்பாது.

தாமும் கொடாது கொடுக்கின்ற பிறரையும் தடுக்கும் பாதகர், பயன்படும் மரத்தைச் சூழ்ந்த உடைவேல் முள்ளைப்போல்வர்.

தாதாவை வருத்தாது வாங்குவது புண்ணியமும் அவனை வருத்தி வாங்குவது பாவமுமாம்.

தீய ஒழுக்கமுடையோருடைய இடத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுடையோரையும் உலகத்தார் தீயொழுக்கமுடையவராக மதிப்பார்.

பெரியோரை அடுத்தவருக்குப் பாவமும், தாபமும், வறுமையும் தங்குதல் அன்றி மேன்மையும் உண்டாகும்.

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றிப் பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுகிறவர்களே உத்தமர்.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கதன்று.

உன்னால் நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமை செய்யாமலிருப்பாயாக.

சபைக்கு வித்துவான்களும் ஆகாயத்துக்குச் சூரியனும் வீட்டிற்கு மனைவியும், புதல்வரும் அழகைச் செய்வர்.

உலோபிகளுக்குக் குருவும் சுற்றமும், பசியுடையோருக்குச் சுவையும் பாகமும், கல்வியில் விருப்பமுடையோருக்குச் சுகமும் நித்திரையும், காமுகர்கட்குப் பயமும் அவமானமுமில்லை.

பெண்களுக்குக் கற்பும், படித்தோர்க்கு இரக்கமும், ஞானிகளுக்குப் பொறுமையும் அழகைச்செய்யும்.

உடம்பு அழிதலால், பயன்படாச் சாதியுயர்ச்சி உடையவரிலும், உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள்.

தாயில்லாத சிறுவனுக்குப் போசன சுகமும் பிதாவில்லாத சிறுவனுக்குக் கல்வியும், சகோ

தரன் இல்லாதவனுக்குத் தைரியமும் மனைவி யில்லாதவனுக்கு எல்லாச் சுகமும் கெடும்.

உயிர்களை வதைசெய்து உடம்புகளைக் கொன்று உண்பவனுடைய வயிறே அவ்வுடம்பு களின் மயானமாகிறது.

மானமென்பது தன்னிலையிற்றாழாமையு தாழ்வு வந்த விடத்து உயிர் வாழாமையுமாம்.

பகைவர் அழுகைக்கு ஒருபோதும் இர காதே.

வாய்மையாவது பிறர்க்குத் தீமை வாரா வாறு பேசுதலாம்.

உண்மையாவது உள்ளதை உள்ளவா கூறுதலாம்.

பூமி திருத்தியுண்; "தொழுதூண் சுவை யினு முழுதூணினிது."

நாம் பிறர்க்குத் தெரியாது செய்கிறோம் என்று செய்யும் காரியங்களை எல்லாம் கடவு பார்த்துக் கொண்டேயிருக்கின்றார் என்பதை மறவாதே.

கடமை சரியாகச் செய்யப்பட்டா கவலைக்கு இடமில்லை.

கடமை செய்யாது உரிமை விரும்புவோ ரிடம் கவலை குடி கொள்ளும்.

ஒருவனுக்கு வாழ்வும் தாழ்வும் அவன் செய்யும் நற்கருமங்களையும் தீக்கருமங்களையும் பொறுத்து ஏற்படுகின்றன.

புலையும் கொலையுங் களவுந் தவிர்.

உன்னுடலும் முகமும் மலர்ச்சியும் கவர்ச்சியு முடையனவாக இருக்கவேண்டுமென விரும்புவாயாயின் கடமை செய்யத் தவருதே.

வாயாற் சொல்வதிலும் செயலிற் காட்டப் படுவனவே மிகுதியாக இருத்தல் வேண்டும்.

இவ்வுலகை விட்டு உன்னுயிர் நீங்கும் போது மகிழ்ச்சியுடன் நீங்கவேண்டுமாஞல் எந்நேரமும் பிறர்க்கு இதஞ்செய்வாயாக.

மனநன்மையுடையோருடைய கடுஞ்சொல் லும் இன்பம் விளைவிக்கும்; மனநன்மை இல்லா தவருடைய இன்சொல்லுந் துன்பம் விளை விக்கும்.

கோபத்தைச் செய்தல் எளிது; கோபத்தை அடக்கல் அரிது; ஆதலின் அரியதைச் செய் தலே பெருமை.

மேலோர் தங்குறையை நீக்காது பிறர் குறையை நீக்குவர்.

ஐம்புலன்களிஞல் மூடரேயன்றி, மெய்யறி வுடையோர் துன்பமடையார்.

[புலன்கள் ஐந்தாவன:—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்.]

எத்துணைப் பெருஞ்செல்வத்திற்கும் அதி காரத்திற்கும் அழிவு வருமென்று அறிந்து அடங்குவோரே அறிவுடையோர்.

பிறருக்கு வருந்துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோருக்கு இயல்பாம்.

ஒருவனிடத்துள்ள நற்குணத்தையே மேலோரெடுத்துப் பேசுவர்; தீக்குணத்தையே கீழோரெடுத்துப் பேசுவர்.

உருவத்தாற் சிறியவரும் அறிவினுற் பெரியவராயிருப்பர்.

கடவுளிடத்து மனமழுந்தப்பெற்றவர் எத்துணைப் பெருந்துன்பங்களுக்கு மஞ்சார்.

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அது பயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால் கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாந் தலையாயது.

நமது தேசத்தில் வறுமை மேலிட்டும் சரீர பலங் குறைந்தும், தீயொழுக்கம் மலிந்தும் வருதற்குரிய காரணங்களுள் முக்கியமானது மதுபானம். தொட்டிலிற் பழக்கஞ் சுடுகாடுமட்டு மாதலின், மதுவுண்ணப் பழகிய பின்னர் அதனைத் தடுத்தல் பயன்படாத செயலாகும். இளமையிலே அதனைப் பழகாவண்ணம் ஒவ்வொரு இளைஞரும் அதனுலுண்டாகும் கெடுதிகளை அறிந்து கொள்ளவேண்டும்.

கள்ளில் மதுசாரம் என்னும் விஷ சத்து ஒன்று உண்டு. குடித்தவுடன் அவரவர் தேக பலத்துக்குத் தக்கவாறு வெறியை உண்டாக்கி விடும். இரத்தத்துடன் சேர்ந்து அதன் சத்தையும் வேகத்தையுங் குறைத்து நீர்த்துப்போகச் செய்கிறது. சீரணக் கருவிகளை தளரச்செய்கிறது. புளிப்பு ஏறிக்கொண்டுவர, அதன் தீக்குணங்களும் ஏறிக்கொண்டே வரும். மூளையை

யும் அதைச்சார்ந்த பிரதான நரம்புகளையும் தாக்கி அவைகளைத் தளரச்செய்து, வெறியை உண்டாக்கிப் புத்தியை மயக்குகின்றது. சற்று அதிகமானால் உண்ட உணவை வாந்தி செய்வித்து விடுகிறது. பல நோய்களுக்கும வித்தாகி ஆயுளைக் குறைத்து விடுகிறது.

குடியால் இருதயம் ஈரல் இவைகள் அளவுக்குமேல் வேலை செய்து பின் அதிகமாய்க் களைத்து விடுகின்றன. இரத்தத்தை அசுத்தமாக்கியுங் கெடுத்தும் அதன் சத்தைக் குறைத்தும் விடுவதால் பலஹீனமும் சோம்பலும் உடனே உண்டாகின்றன. சோம்பலைவிடக் கெடுதி உலகில் வேறொன்றில்லை. சோம்பலே வறுமைக்கு முக்கிய காரணம்.

வெறி யேறியவுடன் நல்லவை தீயவைகளை அறியாமல், பொய் கூறல், திருடுதல், சூதாடல், பழி பாவங்களுக்கு அஞ்சாது துர்க்கருமங்களைச் செய்தல் முதலிய எல்லாம் உண்டாகின்றன. நமது தேசத்துக் குற்றவாளிகளில் பெரும்பாலார் குடிகாரர்கள்தாம். குடிவெறியால்தான் சண்டை சச்சரவுகள் பெரும்பாலும் உண்டாகின்றன. இந்த வெறியினால் செய்யுங் காரியங்கள்தாம் குற்றவிசாரணைக் கோடுகளுக்கு வேலை கொடுக்கின்றன. இந்த வழக்குகளுக்காக வக்கீல்கள், குமாஸ்தாக்கள், சாட்சிகள் சில்லறைத் தேவதைகளுக்குக் கொடுத்து அழிந்த குடும்பங்கள் பல உண்டு. இக்குடியால் உண்டாகுஞ் செலவால் வறுமை

யடைந்து தம் மனைவி மக்கள் உண்ண இருக்கும் உணவுப் பொருளையும் விற்றுக் குடித்து அவர்களைச் சோற்றுக்குந் துணிக்குந் தவிக்க விடும் குடிகாரர்கள் நமது தேசத்தில் எத்தனையோ பங்கு மிகுந்துவிட்டார்கள். குடியால் வறுமை யடைந்தோர் திருடத் தலைப்படுவர். எந்தக் குற்றச் செய்கையானாலும் அஞ்சாது செய்து பணங் கொண்டுபோய்க் குடித்துத் தீர்ப்பார். குடிகாரன் மனைவி பகலெல்லாம் உழைத்துத் தன் கணவனுக்குச் சோறிடினும் அவன் செய்யும் அக்கிரமத்துக்குங் கொடுமைக்கும் அளவில்லை.

இக்குடியில்லாது விட்டால் நமது தேசத்தில் நடந்த உயிர்க்கொலைகள் எத்தனையோ தவிர்க்கப்பட்டிருக்கும். இக்குடி, உண்டவன் குடியைக் கெடுத்தே தீரும். இதுபோலவே கெடுதியை உண்டாக்கும், மதுசாரங் கூடுதலாயுள்ள நாட்டுச்சாராயம், சீமைச்சாராயம், பிராந்தி, விஸ்கி முதலிய குடிவகைகளையும் அபின், கஞ்சா முதலிய மயக்கப்பொருள்களையும் தேசத்தவர்களுக்குக் கிட்டாமல் அகற்றிவிடவேண்டியது, தேசநன்மையை விரும்பிய அரசாங்கத்தின் கடனாகும். மதுபானத்தைப் பழகிக்கொள்வது அறியாமையாலுங் கெட்ட சகவாசத்தாலுமே. ஆனதால் மதுவின் தீமையை இளமையிற் கல். குடியரோடு சகவாசஞ் செய்யாதே.

தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவா திருப்பதும், பிறர் செய்த தீமையைப் பொறுத்த லும், இன்சொல்லும், எல்லா உயிர்களுக்குந் துன்பஞ் செய்யாமையும், கல்வியும், ஒப்புர வறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தா ரோடு நட்டலும் ஆகிய இவ்வெட்டு வகையும் மேலோரால் சொல்லப்பட்ட ஆசாரங்களுக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

[ஒப்புரவு - உலக நடைமுறை.]

எந்நாளும் ஆசாரத்தில் தவறுதவர்கள், நற்குடியிற் பிறத்தல், தீர்க்காயுள், செல்வ முடைமை, அழகுடைமை, நிலவுரிமை, சொற் செலவு, கல்வி, பிணியின்மை, இந்த எட்டை யும் அவற்றின் இலக்கணத்துடன் அடைவார் கள்.

[சொற்செலவு - தேவைக்குமிஞ்சிப்பேசுதல்.]

வைகறையாகிய பின் யாமத்தில் நித்திரை விட்டெழுந்து, தான் செய்யவேண்டிய நல்ல கருமத்தையும் அழகாகிய பொருள் வருவா யாகிய காரியத்தையும் மனதில் ஆலோசித்து, தந்தையையும் தாயையும் வணங்கி, வாய்ப்பான காரியத்தில் முயலுக என்று சொல்லப்படுவதே முன்னோர் சொல்லிய முறைமையாம்.

சிறுகாலையில் கோல் கடித்துப் பல் விளக்கி கண்களைக் கழுவிக் கடவுளைத் தான் தானறிந்த முறையில் வணங்கிப், பின்பு ஒரு கருமத்தில் முயலுக. தான் வணங்குந் தெய்வத்தை நின்று வணங்குதலும் இருந்து சிந்தித்தலும தகுமாம்.

மேன்மை பொருந்திய அறிஞர் ஆடை யுடுத்தல்லது நீராடமாட்டார். ஒற்றை ஆடை உடுத்துப் புசியார். தாம் உடுத்த ஆடையை நீரின்கண் பிழியமாட்டார். எந்நாளும் ஒற்றை ஆடையை உடுத்து சபையிற் புகமாட்டார். இவைகள் முன்னோர் சொல்லிய நூற்றுணிபுகள்.

உபாத்தியாயர், தாய், தந்தை, தமையன் ஆகிய இவர்கள் ஒப்பில்லாத குரவராவார்கள். இவர்களைத் தேவரைத்தொழுதெழுவதுபோலத் தொழுதெழுகவென்பதே, நல்லோர் எல்லாருஞ் சொல்லிய நெறியாம்.

[குரவர் - பெரியோர்.]

எக்காலத்தும் ஒழுக்கத்தில் தவறுதவர்கள் விருந்தினரும், மிக மூத்தோரும், பசுக்களும், சிறைபட்டவர்களும், பிள்ளைகளும் ஆகிய இவர்களுக்கு உணவு கொடுத்தல்லது தாம் உண்ணமாட்டார்.

இரண்டு கைகளாலும் முகந்தும், ஏற்றும், தண்ணீர் குடியார், குரவர் கொடுப்பவற்றை ஒரு கையால் வாங்கிக்கொள்ளார். அவர்க்குத் தாம் ஒரு கையால் கொடார், உடம்பைத் தீண்டி இரண்டு கைகளாலும் சொறியார் என்பது சிறந்தவர் சொல்லிய நெறியாம்.

படுக்கும்பொழுது கடவுளைக் கைகுவித்துத் தொழுது வடதிசையிலும மூலைத்திசையிலும் தலை வைக்காமல் மேற்போர்வை ஒன்றை உடம்பின்கண் கொடுத்துக் கிடத்தல் நன்னெறியாம்.

பிறர் மனையாளும், கள்ளும், களவும், சூதும், கொலையும் ஆகிய இவ்வைந்தினையும் தருமமார்க்கத்தை அறிந்தவர் மனத்தால் நினைத்தலுஞ் செய்யார்.

பொய்யும், கோளும், பிறர் பொருளை அபகரிக்க வேண்டுமென்னும் ஆசையும், பிறர் ஆக்கத்தில் பொறாமையும், ஆகிய இந்நான்கினையும் சந்தேகம் நீங்கிய அறிவினையுடையார் நினையார்; நினைப்பாராயின் பலரால் இகழப்பட்டு, கடவுள் அருளை இழந்து, பிச்சை புகுந்து நரகவேதனையை அநுபவிப்பார்.

நற்குலப் பெண்டிர் தம் கணவருடைய உடம்பின் அழகையன்றி மற்றையாடவரது மேனி எவ்வளவு அழகுடையதாயினும் பாரார்.

துன்பம் அடையுங்காலத்தில் அத்துன்பத்தைப் பொறுத்து வாழ்தலும், இன்பகாலத்தில் பிறர்க்கு இன்பஞ் செய்யும் வகையால், இன்புற்று நடத்தலும், அன்பினின்றும் வேறுபட்டவரது வீட்டில் புகாமையும் ஆகிய இந்த மூன்றும் மனம் நல்வழிப்பட்டவரிடத்தே உள்ளனவாம்.

அறிவுடையோர் பெரியோர் சபையினின்று யாதொரு அங்கச்சேட்டையுஞ் செய்யார், குற்றத்தைத் தருவனவாகிய வாசனைப் பண்டங்களைப் பூசிக்கொள்ளார், எக்காலத்திலுங் கடுஞ்சொற்களைச் சொல்லார். இருவராயிருந்து தனித்துப் பேசுமிடத்து இரகசியப் பேச்சாயின் செவிகொடார். தம்மை அழைத்தா

லன்றிக் கலந்து கொள்ளார். ஆதலால் இவற்றை யாவரும் விலக்கக்கடவர்.

அறிவுடையோர் சூதாடுமிடத்தும் ஆரவாரம் நீங்காத இடத்தும், மடைப்பள்ளியிலும், பிறர் வீட்டினுள்ளே ஆண்களில்லாத நேரத்திலும் உட்புகார். ஆதலால் நீ இவற்றை நீக்கிக் கொள்க.

தூக்கணங் குருவியினாற் கட்டப்படுங்கூடும், பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கும், உலண்டு என்னும் பெயருடைய புழுவால் நூற்கப்பட்ட நூலும், கோற்புழுவால் செய்யப்பட்ட கோற்கூடும், தேனீக்களால் திரட்டப்பட்ட தேன் பொதியும் எல்லாராலுஞ் செய்யக் கூடியதன்று. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியஞ் செய்யமுடியாமல் அருமையாக இருக்கும். ஆதலால் எல்லாம் செய்வோமென்று அறிவுடையார் நினையார்.

நண்பர் வீட்டில் தனியே உறங்குதலும், பிறர் மறந்து வைத்த பொருள்களைக் கவர்தலும், நண்பர்களின் கீழ்க்குணங்களை ஆராய்ந்து பார்த்தலும் அறிஞர்கள் செய்யாதனவாம்.

பிரகடன பத்திரம்.

	ரூ.	அ.	பை.
முதற்பாலபாடம்	0	3	0
இரண்டாம்பாலபாடம்	0	5	0
மூன்றாம்பாலபாடம்	0	10	0
நான்காம்பாலபாடம்	1	4	0
நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும்	1	12	0
சூடாமணி நிகண்டு 12-தொகுதியும் உரையுடன் (முதலிரண்டு தொகுதிகள் சொற்பொருளுடன்)	2	0	0
ஷெ 10-தொகுதியுரை	1	4	0
ஷெ 11, 12 தொகுதியுரை	0	12	0
முதற்சைவவினாவிடை	0	3	0
இரண்டாஞ்சைவவினாவிடை	0	10	0
பெரியபுராண வசனம்	2	8	0
சிதம்பரமான்மியம்	0	3	0
அபிராமியந்தாதி உரை	0	4	0
திரிகடுகவுரை	0	4	0
நீதிவெண்பாவுரை	0	[illegible]	[illegible]
நீதிநெறிவிளக்கம் மூலம்	0	[illegible]	[illegible]
ஆத்திசூடி கொன்றைவேந்தனுரை	0	[illegible]	[illegible]
நல்வழியுரை	0	2	0
நன்னெறியுரை	0	2	0
வாக்குண்டாமுரை	0	2	0

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,

வித்தியாநுபாலனயந்திரசாலை,

நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.